புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

================================================================================

# *3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்காலத் தடயங்கள்*
# *(சுடுகாட்டூர் கள ஆய்வினை முன்வைத்து)*

================================================================================

**முனைவர் ஆ.பிரபு**

உதவிப்பேராசிரியர்

தமிழாய்வுத்துறை

தூய நெஞ்சக் கல்லூரி

திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம் 635601

================================================================================

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அருகிலுள்ள ‘சுடுகாட்டூர்’ என்ற இடத்தில் மேற்கொண்ட கள ஆய்வில் ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்காலத் தடயங்களைக் கண்டறியப்பட்டது. தமிழகத்தின் தொன்மையினை விளக்கும் சான்றுகளாகத் திகழ்பவை தொல்லியல் சின்னங்களாகும். அவை தமிழகத்தின் வட மாவட்டங்களில் அதிக அளவில் கிடைக்கின்றன. அவ்வகையில் அண்மையில் திருப்பத்தூரில் இருந்து 15 கி.மீ தொலைவில் உள்ள இப்பகுதியில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அது குறித்து விவரிப்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

***Key Words:*** *தொல்லியல், கள ஆய்வு, பெருங்கற்காலம்*

*திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அருகே உள்ள சிற்றூர் சுடுகாட்டூர். இவ்வூர் மாரியம்மன் கோவில் எதிரே உள்ள மங்கை பெருமாள் என்பவருக்குச் சொந்தமான விவசாய நிலத்தில் ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்காலத் தடயங்கள் கண்டறியப்பட்டது. இங்குள்ள தனியாரது நிலத்தில் உழவுப்பணி மேற்கொண்ட போது பல மண் ஓடுகளும், மண்ணால் செய்யப்பட்ட பொருட்களும் உடைந்த நிலையில் வெளிப்பட்டன. நாங்கள் அவற்றைச் சேகரித்து ஆய்வு செய்தபோது அவை, கருப்பு சிவப்பு மண்பாண்ட ஓடுகள் என்பதை அறிய முடிந்தது. இன்னும் சிறப்பாக பெருக்கற்காலத்தோடு தொடர்புடைய 'ஈமப்பேழையின்' ஊன்று கால் ஒன்றும் கிடைத்திருப்பது சிறப்புக்குரியதாகும்.*

***ஈமப்பேழை***

*ஈமப்பேழைகள் என்பவை பெருங்கற்காலத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்திடப் பயன்படுத்தப்பட்டவையாகும். இவை சுடு மண்ணால் செய்யப்படுபவை. இவை பெருங்கற்காலச் சின்னங்களான, கல்வட்டம் மற்றும் கற்பதுக்கை ஆகியவற்றின் உள்ளே வைக்கப்பட்டிருக்கும். இவை செவ்வக வடிவில் குளியல்தொட்டி போன்று (Bath tub) காணப்படும். இறந்த உடலை உள்ளே வைத்து மூடி போன்ற அமைப்பைக் கொண்டு மேற்புறம் மூடப்பட்டிருக்கும். அடிப்பகுதியில் இரண்டு அல்லது மூன்று வரிசைகளில் ஊன்று கால்கள் அமைந்திருக்கும். சில ஈமப் பேழைகள் விலங்கு வடிவிலும் இருந்திருக்கின்றன. ஆந்திர மாநிலம் சங்கவரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கிடைத்த ஈமப்பேழை ஆடு போன்ற வடிவத்தில் உள்ளது. கேரளாவில் பசுமாட்டின் வடிவில் ஈமப்பேழை கிடைத்துள்ளது. இவை தென்னிந்தியாவின் பல ஈமச்சின்னங்களின் அடியில் காணப்படுகின்றன.*



*ஈமப்பேழை (மாதிரி)*

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் சானூரில் நடைபெற்ற அகழாய்வுகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பல கற்பதுக்கைகளுக்கு உள்ளே இவை கண்டறியப்பட்டுள்ளன. இவை தாழிகள் போலப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் தோற்றத்தில் ஈமத்தாழிகள் என்பவை வேறு ஈமப்பேழைகள் என்பவை வேறாகும். இறந்தவர்களின் எலும்புகள், புழங்கு பொருட்கள் இவற்றின் உள்ளே வைக்கப்பட்டன. முதுமக்கள் தாழிகளைப் போல அதிகளவில் இவை காணப்படுவதில்லை. சில இடங்களில் மட்டுமே கிடைத்துள்ளன. அன்றைய சமூகத்தில் இனக்குழுத் தலைவர்கள் போன்ற தலைமைத்துவத்தில் இருந்தவர்களுக்காக தனித்துவமாக இவை பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

**ஈமத்தாழிகள் / ஈமப்பேழைகள் – இலக்கியத் தரவுகள்**

தமிழகத்தில் இதுவரை நடைபெற்ற அகழாய்வுகளில் அதிகளவில் கிடைத்துள்ள ஈமச்சின்னங்களின் வரிசையில் முதுமக்கள்தாழி முதலிடம் வகிக்கின்றது. இறந்தவர்களை மண்ணால் செய்யப்பட்ட தாழிகளில் இட்டுப்புதைக்கும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. பெருங்கற்காலமக்கள் இவ்வழக்கத்தைப் பின்பற்றி வந்தமையை ஆய்வுகளில்

கிடைக்கக்கூடிய சான்றுகளின் வாயிலாக அறிகின்றோம். பெருங்கற்கால வரிசையில் சங்ககால மக்களும் இவ்வழக்கத்தினைக் கொண்டிருந்ததை அறியமுடிகின்றது.

கலஞ்செய் கோவே! கலங்செய் கோவே!
இருள்திணிந் தன்ன குரூஉத்திரள் பரூஉப்புகை

அகல்இரு விசும்பின் ஊன்றுஞ் சூளை
நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே!
அளியை நீயே; யாங்கா குவைகொல்?
நிலவரை சூட்டிய நீள்நெடுந் தானைப்
புலவர் புகழ்ந்த பொய்யா நல்இசை
விரிகதிர் ஞாயிறு விசும்புஇவர்ந் தன்ன
சேண்விளங்கு சிறப்பின் செம்பியர் மருகன்
கொடிநுடங்கு யானை நெடுமா வளவன்
தேவர் உலகம் எய்தினன்; ஆதலின்,
அன்னோர் கவிக்கும் கண்ணகன் தாழி,
வனைதல் வேட்டனை ஆயின், எனையதூஉம்
இருநிலம் திகிரியாப் பெருமலை
மண்ணா வனைதல் ஒல்லுமோ, நினக்கே? *

கிள்ளிவளவன் என்ற மன்னன் இறந்ததை அறிந்து வருந்திய சான்றோர்களில் ஐயூர் முடவனாரும் ஒருவர். கிள்ளிவளவன் பூத உடலை அடக்கம் செய்வதற்கு உன்னால் தாழி செய்ய முடியும். ஆனால், அவன் புகழுடம்பு மிகப்பெரியது. அதை அடக்கம் செய்வதற்கு ஏற்ற பெரிய தாழியை உன்னால் செய்ய முடியுமா? என்று குயவன் ஒருவனைப் பார்த்து ஐயூர் முடவனார் கேட்பதுபோல் இப்பாடல் அமைந்துள்ளது. இதன் வாயிலாக கிள்ளி வளவன் உடலைத்

தாழியில் இட்டுப்புப் தைத்த செய்தி அறியப்படுகின்றது. முதுமக்கள் தாழிகள் பல்வேறு அளவுகளில் தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. முதுமக்கள் தாழி முறையைப் பொருத்தமட்டில் மூன்று விதமான முறைகள் தமிழர்களால் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. இறந்தபின்பு சடலத்தை தாழியில் அமரவைத்து சடலத்தின் உருவத்திற்கு தகுந்தாற்போல் தேர்ந்தெடுக்கப்பட்ட மட்பாண்டத்தில் வைத்து புதைப்பது. இம்முறையில் பானை பெரிய அளவினதாக இருக்கும். அடுத்த முறையானது இறந்த பின்னர் உடலை வெளிப்புறத்தில் கிடத்தி சில நாள்கள் ஆன பிறகு விலங்குகள், பறவைகள் உண்டது போக எஞ்சிய எலும்புத் துண்டுகளை மட்டும் பொறுக்கி எடுத்து சிறிய அளவிலான மட்பாண்டத்தில் இட்டுப் புதைப்பதாகும். மற்றொரு முறையானது இறந்த பின்பு சடலத்தை எரியூட்டி எஞ்சிய சாம்பலை மட்டும் சிறிய கலயத்தில் இட்டுப் புதைக்கும் முறையாகும்.

**மண்பாண்ட ஓடுகள்**

கருப்பு சிவப்பு நிறத்தில் கண்டெடுக்கப்பட்ட மண்பாண்ட ஓடுகள் ஈமப்பேழையில் வைக்கப்பட்ட மண்ணால் செய்து சுட்டெடுக்கப்பட்ட புழங்கு பொருட்களாகும். இறந்த உடலோடு அவ்வுடலுக்குரியவர் பயன்படுத்திய பொருட்களையும் வைத்து அடக்கம் செய்யும் வழக்கம் அன்றைக்கு இருந்தது. இங்கு கண்டறியப்பட்ட ஓடுகள் **4மி.மீட்டர் தடிமன்** கொண்டாவையாகும். **ஈமப்பேழையின் கால் 14 செ.மீட்டர் நீளமும் அதன் வட்ட வடிவமான அடிப்பகுதி 5.5 செ.மீட்டர் சுற்றளவும் கொண்டதாக உள்ளது. பேழையின் பக்கவாட்டு பகுதியில் இருந்து கிடைத்த ஒரு துண்டானது 4 செ.மீ தடிமண்** கொண்டதாக உள்ளது. பேழையானது களிமண்ணால் செய்யப்பட்டு சுட்டெடுக்கப்பட்டுள்ளது. அதன் உட்புறம் அடர்கருமை நிறத்திலும் வெளிப்புறங்கள் செங்காவி நிறம் பூசப்பட்டும் காணப்படுகின்றது.





***கள ஆய்வில் கண்டறியப்பட்ட ஈமப்பேழையின் கால் மற்றும் ஓடுகள்***

*இவ்வூர் ‘சுடுகாட்டூர்’ என்று அழைக்கப்படுவதும் கவனத்திற்குரியதாகும். ஏனென்றால் இது போன்ற ஈமச்சின்னங்கள் மக்கள் வாழ்விடங்களுக்கு அருகாமையில் தான் பெரும்பாலும் கண்டறியப்பட்டுள்ளன. திருப்பத்தூர் மாவட்டத்தின் பல இடங்களில் இவை போன்ற பழங்கால மக்களின் வாழ்வியல் தடயங்கள் தொடர்ந்து கண்டறியப்பட்டு வருவது மாவட்டத்தின் வரலாற்றுப் பின்புலத்தினை பறைசாற்றுவதாக உள்ளது.*

***புறநானூறு, பா-490***

***களம் : சுடுகாட்டூர், திருப்பத்தூர் மாவட்டம்***

***தகவலாளர் : மங்கை பெருமாள், வயது : 75***